# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே





வெள்ளிக்கிழமை 22.10.2021 | supeedsam.com | supeedsam@gmail.com


# காராமுனையில் சிங்கள குடியேற்றம் கிளர்ந்தெழுந்த தமிழ்,முஸ்லீம் மக்கள்







(க.ருத்திரன்)

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காரா முனை பகுதியில் சிங்கள பெரும் பான்மை மக்களை குடியேற்ற முன்னெடுக்கும் செயற்பாட்டிற்கு எதிராக அப்பகுதி மக்கள் தமது எதிர்ப்பினை தெரிவித்து கவன யீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

வாகரை பிரதேசத்தின் மாங் கேணி காராமுனை பகுதியில் 1982 ஆம் ஆண்டிற்கு முன்பாக சிங்கள மக்கள் குடியிருந்ததாக கூறி நேற்று வியாழக்கிழமை (21) அவர்களுக் கானகாணி தொடர்பான நடமாடும் சேவையொன்று புனாணையில் உள்ள வன இலகா திணைக்களத் தில் நடைபெற்றது.

02 ஆம் பக்கத்தில்...

## எப்போது திட்டமிடப்பட்டது காராமுனையில் சிங்கள குடியேற்றம்?

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக் குப் பக்கமாக அமைந்துள்ள வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கார முனை எனப்படும் மாங்கேணி கிராமத் தின் தெற்கு பிரதேசத்தில் 178 சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த மக்களை குடியேற்றுவதற்கான செயற்திட்டம் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டு மிகவும் துரிதமாக முன்னெடுக் கப்பட்டுள்ளது.

இதற்கு அந்த பகுதியில் குடியிருந்த சிங்கள மக்கள் குடியிருந்து 1985 ஆம் ஆண்டு யுத்த

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கை ஒரு பெரும் சாபத்திற்குள்

### கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை



(காந்தன்)

இலங்கை ஒரு பெரும் சாபத்திற்கு உள்ளாகியுள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் தாக்குதல் இடம்பெற்று 30 மாதங்கள் நிறைவடை வதை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந் தோனியார் தேவாலயத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின்

02 ஆம் பக்கத்தில்...

## இனத்துக்காகத்தான் நாங்கள் போராடுகிறோமே தவிர ஆசனத்துக்காக போராடக்கூடாது



(துதி மோகன்)

இனத்துக்காகத்தான் நாங் கள் போராடுகிறோமே தவிர ஆசனத்துக்காக போராடக்கூ டாது என்று மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வாகரை பிர தேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட காராமுனை பிரதேசத் தில் சிங்கள மக்களைத்

02 ஆம் பக்கத்தில்...

## காட்டு யானை தாக்குதலில் 63 வயதுடைய தொழிலாளி மரணம்



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு செங்க லடி நகர பிரதேசத்தை அண் மித்த பகுதியில் இடம்பெற்ற காட்டு யானை தாக்குதலில் 63 வயதுடைய தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக உயி ரிழந்துள்ளார்.

நேற்று (21) மாலை இச் சம்பவம்

02 ஆம் பக்கத்தில்...

## இறுதி யுத்தத்தின் முடிவில் சரணடைந்த குழந்தைகள், சிறுவர்களுக்கு என்ன நடந்தது?

இறுதி யுத்தத்தின் முடிவில் தங்கள் குடும்பங்களோடு சரணடைந்த குழந்தைகள் மற் றும் சிறுவர்களுக்கு என்ன நடந்தது எனத் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பாராளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் உரை யாற்றும் வேளையிலேயே மேற்கண்டவாறு தெரிவித் தார்.

02 ஆம் பக்கத்தில்...

## மாடறுப்புத் தடையால் பாதிக்கப்படப் போவது முஸ்லிம் சமுகம் மாத்திரமல்ல

### அதனை அரசு விரைவில் விளங்கிக் கொள்ளும்; இம்ரான் எம்.பி விசனம்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)



இந்த அரசு கொண்டுவரத் துடிக்கும் மாட றுப்புத் தடையால் பாதிக்கப்படப் போவது முஸ்லிம் சமுகம் மாத்திரமல்ல. இந்நாட்டில் வாழும் சகல சமுகத்தினரும் தான் பாதிக்கப் படப்போகின்றார்கள் என்பதை அரசு விளங்கிக் கொள்ளும் நாள் வெகுவிரைவில் வரும்

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பம்

(வி.ரி.சகாதேவராஜா)

கொரோனா நீண்ட விடு முறையின்பின்பு கிழக்கில் நேற்று(21)வியாழக்கிழமை பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன.

கல்வி அதிகாரிகள் பாடசா லைகளுக்க விஜயம்செய்து கண்காணிப்பிலீடுபட்டது டன்

02 ஆம் பக்கத்தில்...

## மடத்தடி மீனாட்சியம்மன் ஆலய தலைவர் கோ.கமலநாதன் காலமானார்

(வி.ரி.சகாதேவராஜா)



வரலாற்றுப்பிரசித்திபெற்ற நிந்த வூர் மாட்டுப்பழை மடத்தடி மீனாட் சிஅம்மன் ஆலயத் தலைவர் கோ. கமலநாதன்(68) நேற்று (21)வியாழன் காரைதீவில் காலமானார்.

02 ஆம் பக்கத்தில்...










## காராமுனையில் சிங்கள குடியேற்றம்

இந்த நடமாடும் சேவையினை மத்திய காணி ஆணையாளர் ஜீ.கீர்த்திகமகே மற்றும் கிழக்கு மாகாண உதவிக் காணி ஆணையாளர் ஜீ.ரவிராஜன்,ஆகியோர்கள் இணைந்து நடாத்தினார்கள்.இதற்கான ஏற்பாடுகள் ஜனாதிபதியின் தலைமையிலான இலங்கை பௌத்தமத ஆலோசனை குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நடமாடும் சேவையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக காணித் திணைக்கள மேலதிக அரசாங்க அதிபர், திருமதி நவரூபரஞ்ஜனி முகுந்தன் வாகரை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி அமலினி கார்த்தீபன் பொலிஸ் உயர் அதிகாரி,வன இலகாதிணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் 1982 ஆம் ஆண்டிற்கு முன்பாக வசித்ததாக தெரிவிக்கப்படும் வெளிமாவட்டங்களில் வசிக்கும் சிங்கள மக்களின் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்கான காணிகளை அடையாளப்படுத்தி வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வேளை அப்பகுதிக்கு சென்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையிலான குழுவினர் மேற்படி செயற்பாடுகள் தொடர்பில் தமது கடுமையான எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன்,பா.அரியநேத்திரன்,ஞா.சிறிநேசன்,மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சி.சரவணபவன்,முன்னாள் கிழக்கு மாண சபை பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார்,முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராஜா,ஏறாவூர்பற்று பிரதேச சபை தவிசாளர் எஸ்.சர்வானந்தன்,பிரதேச சபை மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் குறித்த நடமாடும் சேவை நடைபெறும் இடத்திற்கு சென்று தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினார்கள்.

அப்பகுதிக்கு பெருமளவான பொலிசார் அழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தியிருந்ததுடன் குறித்த காணி நடமாடும் சேவைக்கும் சிங்கள குடியேற்றத்திற்கும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் எதுவித குடியேற்றமும் செய்யப்படாது எனவும் காணி ஆவணங்களை மட்டும் பரிசோதனைகள் செய்யப்பட்டு பின்னர் அவர்களுக்கு வேறு இடங்களில் காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என காணி ஆணையாளர்களினால் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் உறுதியளிக்கப்பட்டது.

இதனையடுத்து காராமுனைக்கு சிங்கள மக்களும் காணி ஆணையாளர் குழுவும் சென்று அங்கு காணிகளை பார்வையிட்ட நிலையில் அதற்கு எதிராக அப்பகுதி மக்களும் அரசியல் பிரமுகர்களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்து காணி ஆணையாளரை அப்பகுதியினை விட்டு வெளியேறுமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அதனைத் தொடர்ந்து காணி ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் வெளிமாவட்டத்தைச்சேர்ந்த சிங்கள மக்களும் அவ்விடத்தில் இருந்து திரும்பி சென்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன்,மற்றும் இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்,ஹாபிஸ் நசிர் அகமட் போன்றவர்கள் இவ்வாறான சம்பவங்கள் நடக்கும்போது கொழும்பிலும் வெளிநாடுகளுக்கும் சென்று ஒழிந்து கொள்வதாகவும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

1976 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் தங்களுக்கு விவசாயம் மேற்கொள்வதற்கு 5 ஏக்கர் காணியும் குடியிருப்பதற்கு 1 ஏக்கருமாக மொத்தமாக 6 ஏக்கர் காணி ஒரு குடும்பத்திற்கென, 190 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் 1983 ஆம் ஆண்டு யூலை கலவரத்தின் காரணமாக இடம்பெயர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வந்ததாகவும் யுத்தம் முடிந்த பின்னர் தங்களுக்குரிய காணியினை வழங்குமாறு அரச திணைக்களங்களுக்கு முறையிட்டதன் பயனாக 21.10.2021 வியாழக்கிழமை எங்களது காணிகளை அடையாளப்படுத்துமாறு காணித்திணைக்களத்தினால் அழைக்கப்பட்டதற்கிணங்க தாங்கள் வருகை தந்ததாகவும் கூறுகின்றனர்.

தங்களது காணிகள் வேறு நபர்களால் பராமரிக்கப்பட்டு வருமாக இருந்தால் அதற்கு பதிலாக மாற்றுக் காணி வழங்குமாறும் வருகை தந்த சிங்கள மக்கள் தெரிவித்தனர்.

வாகரை பிரதேசம் தமிழ் பேசும் மக்களின் பிரதேசமாகும். இங்கு அரசாங்கத்தினால் திட்டமிட்டு குடியேற்றம் செய்ய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அதற்கு நாங்கள் ஒரு போதும் அனுமதி வழங்குமாட்டோம். இன்று தமிழர் பிரதேச காணிகள் பறிபோகும் நிலையில் மாவட்ட அபிவிருத்தி செய்வதாக கூறும் இராஜங்க அமைச்சரோ,கிழக்கை மீட்;கப் போகிறோம் என்று தெரிவிக்கும் அபிவிருத்தி குழுத் தலைவரோ மாவட்டத்தில் முஸ்லிம்களின் ஒரே பிரதி நிதியாக இருப்பவரையும் காணவில்லை. மக்களுக்கு பிரச்சினை வரும்போது பிரச்சினையை தீர்த்து வைக்காதவர்கள்தான் இன்று அபிவிருத்தி தொடர்பில் பேசுவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

## இறுதி யுத்தத்தின் முடிவில் சரணடைந்த குழந்தைகள், சிறுவர்களுக்கு

மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புப் போரின் இறுதிக் கனங்களில், படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து பல சிறுவர்கள், அதிலும் குறிப்பாக விடுதலைப்புலிகளின் முதல்நிலை உறுப்பினர்கள் பலரது பிள்ளைகள் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

1. விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அறிக்கைப் பொறுப்பாளர் அம்பி அவர்களின் குழந்தைகள் பிரியாளினி பரமேஸ்வரன், பிரதீபன் பரமேஸ்வரன், பிறையாளன் பரமேஸ்வரன்,

2. மணலாறு தாக்குதல் படையணியைச் சேர்ந்த இளங்குமரன் அவர்களின் மகள் அறிவுமதி,

3. யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்களின் பிள்ளைகளான தமிழொளி மகாலிங்கம், எழிலினி மகாலிங்கம், மகிழினி மகாலிங்கம்,

4. கலை மாஸ்டரின் மகள்மாரான கானிலா திருச்செல்வம், லக்சாயினி திருச்செல்வம்,

5. மணலாறு தளபதி மஜீத் அவர்களின் பிள்ளைகளான சாருஜன் முரளிதரன், அபிதா முரளிதரன்,

6. அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் அவர்களின் மகன் ஜனகன் மகேந்திரன்,

7. நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பிரியன் அவர்களின் ஒரு வயதேயான மகள் கலைச்சுடர் தயாசிறீ,

8. விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா அவர்களின் மகன்மாரான சாருஜன் கிருஸ்ணமூர்த்தி, நிகநிலான் கிருஸ்ணமூர்த்தி, ஆதிரையன் கிருஸ்ணமூர்த்தி,

9. வனவளத்துறைப் பொறுப்பாளர் சக்தி அவர்களின் பிள்ளைகளான தமிழின்பன் சத்தியமூர்த்தி, தமிழ்முகிலன் சத்தியமூர்த்தி, இசைநிலா சத்தியமூர்த்தி,

10. சுடர் அவர்களின் குழந்தைகளான அபிராமி சுரேஸ்குமார், அபிசன் சுரேஸ்குமார்,

11. வனவளப் பாதுகாப்புக்கான மன்னார் மாவட்ட பொறுப்பாளர் சுமன் அவர்களின் மகள் தணிகைச்செல்வி செல்வகுமார்,

12. அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் அவர்களின் பிள்ளைகளான துவாரகன் சுதாகரன், துவாரகா சுதாகரன், துர்க்கா சுதாகரன்,

13. மன்னார் மாவட்ட படையணிப் பொறுப்பாளர் வாகீசன் அவர்களின் பிள்ளைகளான சிந்தரசி நிமலநாதன், கோகலை நிமலநாதன், கலையரசன் நிமலநாதன்,

14. புகைப்படப்பிரிவுப் பொறுப்பாளர் ஜவான் அவர்களின் மகள் எழில்நிலா சற்சுதன் உள்ளிட்டோர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சரணடைந்ததற்கான சாட்சிகள் இருக்கிறது .

குழந்தைகள் சிறுவர்களுக்கார புதிய சட்டங்கள் சீர்திருத்தங்கள் பற்றி பேசிக் கொண்டிருக்கிற மேலே குறிப்பிட்ட சிறார்களுக்கு என்ன நடந்தது இவர்களில் பெரும்பாலானோர் எனது மாணவர்கள் ஆவர். சிறைச்சாலைகளில் எத்தனையோ பெண்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குழந்தைகளோடு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பயங்கர வாத தடைச்சட்டத்தின் மூலம் தற்போதும் தமிழர்களை சித்திரைவதை செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 39 பேர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்டபடுத்தப்பட்டுள்ளனர். பயங்கர வாத தடுப்பு பிரிவினரால் அழைக்கப்படும் கரைச்சி பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகிய பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் ஏனையோரும் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர்.

எமக்கு நினைவேந்தல் செய்கிற உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது எமது பிள்ளைகளை நினைவுகூர முடியாதவர்களாக நாங்கள் இருக்கிறோம்.

## எப்போது திட்டமிடப்பட்டது காராமுனையில் சிங்கள குடியேற்றம்?

சூழல் காரணமாக் இடம்பெயர்ந்ததாக காரணம் காட்டுகின்றனர்.

அந்த 178 குடும்பங்களும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. மாறாக அவர்கள் திம்புலாகல தேரரால் முன்னெடுக்கப்பட்டு வந்த இந்த திட்டம் 2015 இல் கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த ஒஸ்ரின் பெனாண்டோ அவர்கள் அப்போது காணி உதவி ஆணையாளர் இருந்த சிங்கள பெண்ணிடம் 178 பேருடைய ஆவணத்துடன் தேரர் சென்றபோது அதனை அவர் பார்த்துவிட்டு பொய்யான ஆவணங்கள் என அதனை நிராகரித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்கள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருந்த போது அப்போது மட்டக்களப்பில் இந்த பிரச்சனை பூதாகரமானது.

அப்போது காணி ஆணையாளர் அனுமதிப்பத்திரம் வழங்கவேண்டும் என மட்டக்களப்பு நாவலடியிலுள்ள கேணிநகர் கிராம அபிவிருத்தி சங்க கட்டிடத்தில் நடாத்த திட்மிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த வெளி மாவட்டத்தைச் சேர்ந் 178 பேருக்கும் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

இந்த 178 குடும்பங்களும் குடியேறி 1985 வெளியேறியிருந்தால் அவர்கள் 1981ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அதனை கொடுப்பது நியாயமானது சிங்கள மக்கள் இருந்த இடத்தில் அதை கொடுப்பதற்கு தடையில்லை ஆனால் பிழையான முறையில் குடியேற்றம் நடைபெறுகின்றது.

அப்போது உதவி அரசாங்க அதிபராக இருந்த வாகரை பிரதேசம் மாவட்ட செயலகம் கச்சோரி இவற்றில் அவர்கள் இருந்ததற்கான ஆதாரம் இருந்திருக்கும்.

இலங்கையில் காணிச்சட்டம் ஒன்றுதான் அதில் சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம் தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் என்து இருக்கின்றதா? ஆகவே இது கூட பிழையான நடைமுறை காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதாக கூறுகின்றனர்.

அந்த அனுமதிப்பத்திரம் சிங்களத்தில் இருக்கின்றது அவ்வாறான ஒரு அனுமதிப் பத்திரம் இதுவரை மாவட்ட செயலகத்தில் வழங்கப்படவில்லை அவை புதிதாக தயாரிக்கப்பட்டுள்ளன இதில் கையொப்பமிட்ட காணி உத்தியோகத்தர் மட்டக்களப்பில் கடமையாற்றியவருமில்லை, மாவட்டத்தைச் சேர்ந்தவருமில்லை, அவர் அம்பாறையைச் சேர்ந்த உத்தியோகத்தர்.

அதேவேளை அம்பாறை பொத்துவில் கனகர் கிராமத்தில் நீண்டகாலமாக மக்கள் வாழ்ந்து யுத்தத்தால் வெளியேறிய சுமார் 300 குடும்பங்களை இன்றுவரை குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

அந்த மக்கள் மிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த மக்கள் அப்படியிருக்க சிங்கள மக்களுக்கு திட்டமிட்டு பொய்யான ஆவணங்களை தயாரித்து காணியிருக்கும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அத்துமீறிய திட்டமிட்ட சிங்கள குயேற்ற இருப்பதை வன்மையாக கண்டிக்கின்றோம். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் கெவிளியாமடுவில் ஆயிரக்கனக்கான ஏக்கர் காணியை ஊர்காவல்படையினரை வைத்து பயிர்ச் செய்கை என்ற பேர்வையில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறு மாதவனை, மயிலத்தமடு மேச்சல்தரையும் சிங்கள மக்களை குடியேற்ற திட்டம்.

புணாணையில் பௌத்த மத்திய நிலையம் அமைக்க வேண்டும் என திம்புலாகல தேரர் 50 ஏக்கர் காணி வாகரை பிரதேச செயலாளரிடம் கோரிக் கொண்டிருக்கின்றார்.

இவற்றுக்கு எல்லாம் காரணம் மட்டக்களப்பு வனபரிபாலனசபை ஒரு சிறு துண்டை தமிழ் மக்கள் பிடித்தால் உடனடியாக சட்டத்தை நாடுகின்றனர்.

ஆனால் காரமுனையில் இந்த 1%8 குடும்பங்குளக்கும் காணிவழங்க இங்கு இருக்கின்ற சிங்கள அதிகாரி பூரண ஆதரவை வழங்கியுள்ளார்.

எனவே திட்டமிட்டு சிங்களகுடியேற்றத்தை ஏற்றுவதற்கு சிங்கள அதிகாரிகள் செயற்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாத இந்த நாடு ஒன்றாக இருந்தால் நீதி ஒன்றாக இருந்தால் இவ்வாறான செயற்பாடுகள் நடாத்தப்படமுடியாது. ஏன அப்பகுதி தமிழ் பேசும் சமூகத்தினரும், அவர்களுக்காக குரல் கொடுக்கும் மக்கள் பிரதிநிதிகளும் தெரிவிக்கின்றனர்.

## மடத்தடி மீனாட்சியம்மன் ஆலய தலைவர்

காரைதீவைப்பிறப்பிடமாகக்கொண்ட கோ.கமலநாதன் முன்னாள் இலங்கை தொலைத்தொடர்புத் திணைக்கள உத்தியோகத்தராவார். 3பெண்பிள்ளைகளின் தந்தையான இவர் காரைதீவில் சமுகசேவைகளில் முன்னின்று பணியாற்றியவர்.

1953.03.15 ஆம் திகதி பிறந்த கோ.கமலநாதன்கடந்த ஒருதசாப்தகாலமாக மடத்தடி மீனாட்சிஅம்மன்ஆலயத்தின் தலைவராக இருந்து அரும்பணியாற்றிவராவார்.

ஆலயவளர்ச்சியில் அரும்பாடுபட்டு உழைத்த தலைவர் கோ.கமலநாதன் புதிய ஆலயமொன்றை அமைத்து கும்பாபிசேகம் காணவிருந்தவேளையில் காலமாகியுள்ளமை வேதனையளிப்பதாக உபதலைவரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ண பிள்ளை ஜெயசிறில் அனுதாபஅஞ்சலிக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அன்னாரர் பூதவுடல் இன்று(22)வெள்ளி காலை 10மணியளவில் காரைதீவு இந்துமயானத்தில் தகனக்கிரியை இடம்பெறுமென குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## கிழக்கில் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பம்

வரவு அறிக்கைகளுடன் செவ்வைபார்த்தல் பட்டியலையும் பூர்த்திசெய்மு அறிக்கைசெய்தனர்.

அதேவேளை பொலிசாரும் சகல பாடசாலைகளுக்கும் சென்று காலை முதலே கண்காணிப்பிலீடுபட்டதுடன் வரவு அறிக்கைகளையும் பெற்றுக்கொண்டனர்.

மாணவர் வரவு அதிபர் வரவு ஆசிரியர்வரவு கல்விசாரா ஊழியர்களின் வரவு என்பன முக்கியமாகக்கவனிக்கப்பட்டது.

மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்வத்தோடு வருகைதந்திருந்தனர். வகுப்பறையில் சிலரும்வெளியேயும் அநாயாசமாக மாணவர்கள் திடந்தனர்.ஆசிரியர்களும் அவ்வாறே தத்தமது கருமங்களில் ஈடுபட்டனர்.

கிழக்கிலுள்ள 13வலயங்களிலும் பாடசாலைகள் திறக்கப்பட்டன என்று கிழக்குமாகாணகல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் அறிவித்துள்ளார்.

நேற்று அவர் சகல வலயக்கல்விப்பணிப்பாளர்களின் அறிக்கைகளைப்பெற்று இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை நேற்று சகல வலயக்கல்விப் பணிமனைகளுக்கும் பாடசாலைமீளஆரம்பிப்பதைக்கண்காணிக்கும் மாகாண கண்காணிப்புக்குழு விஜயம்செய்தன. மாகாணத்தில் 200மாணவர்களுக்கு குறைந்த ஆரம்பவகுப்புக்களைக்கொண்ட 568பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டன.

## காட்டு யானை தாக்குதலில் 63 வயதுடைய

இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடி கொடுவாமடு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மூத்தம்பி காளிக்குட்டி என்பவரே பலியானவரென அடையாளங்காணப்பட்டுள்ளது.

கூலித்தொழிலாளியான இவர் மாடு மேய்த்துக் கொண்டிருந்தவேளையில் பற்றைக்காட்டுக்குள் மறைந்திருந்த யானை இவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரசேத திடீர் மரண விசாரணையதிகாரி எம் எஸ்எம். நஸிர் சம்பவ இடத்திற்கு நேரடியாக வருகை தந்து விசாரணைகளை ஆரம்பித்தார்.

ஏறாவூர்ப் பொலிஸார் குடும்ப உறவினர்கள் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

சடலம் பீசீஆர் மற்றும் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## மாடறுப்புத் தடையால் பாதிக்கப்படப் போவது

என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்நாட்டில் மாட்டிறைச்சியை முஸ்லிம் சமுகம் மட்டும் தான் சாப்பிடுகின்றது. இதனைத் தடை செய்வதன் மூலம் முஸ்லிம் சமுகத்திற்கு பாடம் புகட்டலாம் என்ற மாயையை பெரும்பான்மை சமுகத்திற்குக் காட்டுவதற்காகவே அரசு மாடறுப்புத் தடையைக் கொண்டு வர முழுமுயற்சி எடுத்து வருகின்றது.

மாட்டிறைச்சியை இந்நாட்டில் யார் யாரெல்லாம் சாப்பிடுகின்றார்கள் என்ற விடயம் மாட்டிறைச்சி விற்பனையாளர்களுக்குத் தெரியும். மாட்டிறைச்சி விற்பனையாளர்களின் புள்ளி விபரங்களின் படி பார்த்தால் இலங்கையில் எல்லாச் சமுகத்தினரும் கனிசமான அளவு மாட்டிறைச்சியைச் சாப்பிடுகின்றார்கள்.

இதனைவிட இந்நாட்டில் அதிகளவு மாடு வளர்ப்போர் சிங்கள மக்கள் தான். பால் கறக்க முடியாத மற்றும் தேவைக்கு மேலதிகமாக உள்ள மாடுகளை இறைச்சிக்காக விற்பனை செய்யும் வாழ்வாதார நடவடிக்கைகளை இம்மக்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். மாடறுப்புத் தடையால் பெரிதும் பாதிக்கப் படப்போவது அவர்கள் தான்.

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதால் ஏற்கனவே அவர்கள் மாட்டிறைச்சி உண்பதைக் குறைத்து விட்டார்கள். இதனைவிட மாடுகளுக்கு காலத்துக் காலம் ஏற்படும் நோய்களினால் மாட்டிறைச்சி எல்லாக் காலமும் கிடைப்பதுமில்லை. இதனால் வேறு உணவுகளை உண்டும் அவர்கள் பழக்கப்பட்டு விட்டார்கள்.

மாட்டிறைச்சி இல்லை என்பதற்காக முஸ்லிம் மக்கள் யாரும் பட்டினி கிடக்கவும் மாட்டார்கள். இறந்து போகவும் மாட்டார்கள் என்பதை அரசுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன். இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில் இந்தத் தொழிலை நம்பி இருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்க அரசு நடவடிக்கை எடுப்பதுதான்.

மாற்று ஏற்பாடுகள் இல்லாமல் தடை செய்வதென்பது இந்த அரசுக்கு கைவந்த கலை. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது குறித்தெல்லாம் இந்த அரசுக்கு கவலையில்லை. மஞ்சள் இறக்குமதித் தடை, அசேதன உரம் தடை, உழுந்து போன்ற தானியங்கள் இறக்குமதித் தடை போன்றன மாற்று ஏற்பாடு இல்லாமல் இந்த அரசு முன்னெடுத்த நடவடிக்கைகள்.

இதனால் பொதுமக்கள் அடைந்த பாதிப்புகள் குறித்து அரசு கவனம் செலுத்தியிருந்தால் மாடறுப்புத் தடையால் ஏற்படும் பாதிப்புகளுக்கும் மாற்று ஏற்பாடுகளை முன்னெடுத்திருக்கும். எனினும் அவ்வாறான மாற்று ஏற்பாடுகள் குறித்த எந்த அறிவித்தலையும் அரசு இதுவரை விடுக்க வில்லை.

எனவே மாடறுப்புத் தடை பற்றி கவனம் செலுத்தும் அரசு இந்தத் தொழிலோடு நேரடியாக மற்றும் மறைமுகமாக சம்பந்தப்படும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். அவர்களது வாழ்வாதாரத்துக்கு மாற்று ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டும் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

## இலங்கை ஒரு பெரும் சாபத்திற்குள்

தலைமையில் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்ட போது கருத்து தெரிவிக்கையிலேயே கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இன்னும் நீதி கிடைக்காத காரணத்தினால் இந்த நாடு பெரும் சாபத்திற்கு உள்ளாகியுள்ளது. நம் நாட்டில் என்றும் இல்லாதவாறு பல அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நாட்டில் சந்தோஷமாய் வாழ்ந்த நிறைய பேருடைய வாழ்க்கை இன்று இருளாக்கப்பட்டுள்ளது. அநேகமானோருக்கு அன்றாடம் உழைத்து சாப்பிட முடியாத நிலை உருவாகியுள்ளது.

இலங்கை ஒரு பெரும் சாபத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்த நாட்டை ஆள்பவர்களுக்கு இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாத அளவுக்கு சாபமாகியுள்ளது. பிறர் எப்படி போனாலும் பரவாயில்லை.நாம் மட்டும் நன்றாக இருந்தால் போதும் என்று தன்னலமாக நினைக்கும் ஒரு சமூகம் உருவாகியுள்ளது. நாட்டு மக்கள் இன்று பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள்.

இதுதான் சுபீட்சம், இதுதான் ஆசியாவின் ஆச்சர்யம். எமது ஆட்சியாளர்களுக்கு இது ஏன் விளங்காமல் உள்ளது? அவர்கள் குருடர்களா? என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கேள்வியெழுப்பியுள்ளார்.

## இனத்துக்காகத்தான் நாங்கள் போராடுகிறோமே

திட்டமிட்டுக் குடியேற்றும் முயற்சிக்குக் கண்டனம் தெரிவித்து குறித்த இடத்திற்கு விரைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் தமிழ் முஸ்லிம் பொதுமக்கள் இணைந்து தமது கண்டனத்தை தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போதே போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்;

மட்டக்களப்பில் வாகரை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட காரைமுனை என்ற இடத்திலே 82 ஆம் ஆண்டுக்கு முன்னதான காலப் பகுதியில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் ஒரு சில மக்களை, ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த சில மக்களை இன்று குடியேற்றுவதற்கு சில திட்டங்களைக் காணி ஆணையாளர் ஆரம்பித்து வைத்திருந்தார்.

இது காதும் காதுமாக வைத்து மறைமுகமாக இரகசியமாக இருட்டடிக்கப்பட்டு செய்த ஒரு விஷயமாகத் தான் நாங்கள் பார்க்கிறோம்.

ஏனெனில் மட்டக்களப்பு மாவட்டத்திலே நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். இந்த கூட்டத்துக்குக் கூட எங்களுக்கு எந்த தகவலும் அறிவிக்கப்படவில்லை.

மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன், மாவட்ட அரசாங்க அதிபர் ஒரு அரசியல் கைதி. ஏனென்றால் இனத்துக்காகத்தான் நாங்கள் போராடுகிறோமே தவிர ஆசனத்துக்காகப் போராடக்கூடாது. அதாவது தங்களுடைய பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இப்படியான தமிழருடைய பிரதேசத்தைக் காட்டிக்கொடுத்து ஒரு மிகப்பெரிய தவறு. அதை நான வன்மையாகக் கண்டிக்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

# ஜும்ஆ தொழுகைக்கு அனுமதி
## சுகாதார அமைச்சு

**திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்**

பள்ளிவாசல்களில் ஜும்ஆ தொழுகைக்காக ஒன்று கூடுவதற்கு அனுமதி வழங்கபட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முதல் ஜும்ஆ தொழுகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்ப்பட்டுள்ள கோவிட் 19 அசாதாரண சூழ்நிலையின் காரணமாக ஒன்று கூடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் பள்ளிவாசல்களிலும் ஒன்று கூடுவது தடைசெய்யப்பட்டிருந்தது.

மீண்டும் நாடு வழமைக்கு திரும்பியுள்ள இவ் சூழ்நிலையில் இன்று முதல் புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய மீண்டும் ஜும்ஆ தொழுகை நடத்துவதற்கான புதிய சுகாதார வழிகாட்டல் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் ஜும்ஆ தொழுகைக்காக மாத்திரம் பள்ளிவாசல்களில் 50 பேர் தொழுகைக்காக அனுமதிக்கப்படுவதுடன் பள்ளிவாசளின் வெளிப்புறத்திலோ அல்லது எந்த இடத்திலும் ஒன்று கூடுவது முற்றாக தடைசெய்ய பட்டுள்ளதாகவும் ஒருவருக்கு ஒருவர் ஒரு மீட்டர் இடைவெளி என சமூக இடைவெளியினை கண்டிப்பாக கடைப்பிடப்படல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொழுகைக்காக வரிசையில் நிட்பதற்காக இடையில் ஒரு வரிசை (ஷாஃப்) இடைவெளி விடப்படல் வேண்டுமெனவும் (இமாம்) உட்பட அனைத்து நபர்களும் சுத்தமான முகக்கவசத்தை மூக்கு மற்றும் வாயை முழுவதுமாக மூட படல் வேண்டும்எனவும் முறையற்ற முகக்கவசம் அணிவதை அனுமதிக்கக்கூடாது எனவும் நுழைவாயிலில் கை கழுவுவதட்காக சவர்க்காரம் மற்றும் நீர் வசதிகள் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் பள்ளிவாயலுக்கு வரும் அனைவரும் கைகுலுக்கல், கட்டிப்பிடித்தல் அல்லது வேறு எந்த விதமான உடல் சம்பந்தமாக வாழ்த்து/தொடர்புகளையும் மேற்றுக்கொள்வது தவிர்க்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சினால் புதிய சுகாதார வழிகாட்டலில் வெளியிடப்பட்டுள்ளது

முடியுமானவரை வீட்டிலிருந்தே முகம் கழுவுவது (வுழூ) செய்து வருவது சிறந்ததென சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் காய்ச்சல், இருமல், தடிமல் , தொண்டை புண், மூச்சுத் திணறல் போன்ற கோவிட் 19 கொரோனாவின் சிறிய அறிகுறிகள் இருந்தால் கூட பள்ளிவாயல்களுக்கு வருவதினை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவ்வாறு அறிகுறிகள் காணப்படும் எந்தவொரு நரையும் அனுமதிக்க கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சுகாதார விதிமுறைகளை எல்லா பள்ளிவாசல்களிலும் கண்காணிக்கக்குமாறும் வெள்ளிக்கிழமை ஜமாஅத் தொழுகை நடத்துவதற்கான இந்த அனுமதி முஸ்லீம் சமூகத்திற்க்கான ஆன்மீக நன்மைகளை கருத்தில் கொண்டு வழங்கப்படுவதாகவும், இவ் சுகாதார நடைமுறையினை அலட்சியம் செய்யும் பட்சத்தில் நாட்டில் உருவாகும் இங்ஙஜஈ19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு எந்த நேரத்திலும் ரத்து செய்யப்படலாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன அவர்களினால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் 90 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன
## முதல்நாளில் அசிரியர் மாணவர் வருகை விகிதாசாரம் குறைவு

**(வாஸ் கூஞ்ஞ)**

நாட்டில் நிலவி வருகின்ற கொரோனா தொற்று நோய் காரணமாக நீண்ட காலமாக பாடசாலைகள் இயங்காத நிலையில் வியாழக் கிழமை (21.10.2021) முதல் இருநூறு மாணவர்களுக்கு குறைவாக காணப்படும் பாடசாலைகளை அரசாங்கம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.




இந்த நேரத்தில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் ஒரு சில கோரிக்கைகளை முன்வைத்து பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் இறங்கி வருகின்ற நிலையிலேயே இந்த நாளில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இருநூறு மாணவர்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ் பாடசாலைகளில் மொத்தம் 2588 மாணவர்கள் கற்கின்றனர்.

மன்னார் கல்வி வலயத்தில் 46 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மொத்தம் 3%84 மாணவர்கள் கற்கின்றனர்.

இந்த வகையில் மன்னார் கல்வி வலயத்தில் குறிப்பிட்ட அனைத்து பாடசாலைகளும் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும்,

ஆனால் மாணவர்களின் வரவின் வீதம் சில இடங்களில் மிக குறைவாகவும் ஒரிரு பாடசாலைகளில் மாணவர்கள் வருகையற்று காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர்களின் வரவு 75 வீதமாக காணப்பட்டதாகவும் ஆசிரியர்களின் வரவு வீதம் குறையும் பட்சத்தில் பட்டதாரி பயிலுனர்கள் மற்றும் ஆரம்பிக்கப்படாத பாடசாலை ஆசிரியர்களை ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் கற்பிப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் மன்னார் கல்வி வலய பணிப்பாளர் இவ்;வாறு தெரிவித்திருந்தார்.

அத்துடன் மடு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் %2 வீதமான அசிரியர்களும். 36 வீதமான மாணவர்களுமே சமூகமளித்திருந்ததாக இதன் கல்விப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

இரு கல்வி வலயங்களிலும் பாடசாலைகளின் நிலவரங்களை நேரில் சென்று பார்வையிடுவதற்காக அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டதாகவும் ஒரு சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இருந்தபோதும் மாணவர்கள் எவரும் வருகை தராத நிலையும் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

# பெருந்தோட்டக் கம்பனிகள் அடாவடி செய்கின்றன
## விரைவில் முடிவு; எம்.பி. ராமேஷ்வரன் தெரிவிப்பு

**(க.கிஷாந்தன்)**

கூட்டு ஒப்பந்தம் இன்மையாலேயே சில பெருந்தோட்டக் கம்பனிகள் அடாவடி செய்கின்றன. இப்பிரச்சினைக்கும் விரைவில் முடிவு காணப்படும். அதற்கான பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.




கொட்டகலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உள்ளாட்சிமன்றத் தேர்தலின் போது சுழற்சிமுறையில் பதவி மாற்றம் இடம்பெறும் என எமது உறுப்பினர்களுக்கு மறைந்த தலைவர் அறிவித்திருந்தார். அந்த வகையில் கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவராக இருந்த சுரேசுக்கு பதிலாக பாலா நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் மேலும் சில சபைகளிலும் மாற்றம் வரும்.

அட்டன் நகரசபை தலைவரை பதவி விலகுமாறு நாம் பணிக்கவில்லை. அதற்கான தேவையும் எழவில்லை. அவர் அப்பதவியில் நீடிப்பார்.

உரப்பிரச்சினை தொடர்பில் நாம் ஜனாதிபதி, பிரதமரிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். பெருந்தோட்டத்துறை தொடர்பான விடயங்களுக்கு உரம் கிடைக்கும்.

அதேவேளை, சில தோட்டங்கள் இன்று ஆயிரம் ரூபாவை வழங்குகின்றன. சில தோட்டங்கள் வழங்குவதில்லை. கூட்ட ஒப்பந்தம் இல்லாமை இதற்கு பிரதான காரணமாகும். இது மக்களுக்கும் தெரியும்.

கூட்டு ஒப்பந்தம் இருந்தபோது இ.தொ.காவின் கட்டுப்பாட்டின் கீழ் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இன்று அது இல்லாததால் சில கம்பனிகள் அடாவடியாக செயற்படுகின்றன. கூட்டு ஒப்பந்தத்தை அடிமை சாசனம் என விமர்சித்த தொழிற்சங்க பிரமுகர்களே, அதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். என்றார்.

# நுவரெலியா கல்வி வலயத்தில் 5 பாடசாலைகள் திறப்பு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நேற்று முதல் 200 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மீண்டும் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும், நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் வராததால் மூடப்பட்டன.நுவரெலியா கல்வி வலயத்தில் 200 க்கும் குறைவான பிள்ளைகளை கொண்ட 92 பாடசாலைகள் உள்ளன.

அவற்றில் ஐந்து மட்டுமே முழுமையாக திறந்திருந்தன என நுவரெலியா வலய கல்வி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.சில பாடசாலைகளில் மாணவர்களின் வருகை மிகவும் குறைவாக இருந்ததாகவும், சில பாடசாலைகளில் அதிபர்கள் வந்து பாடசாலைகளை திறந்து வருகை ஆவணங்களில் கையெழுத்திடவில்லையெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகளவான மாணவர்கள் கல்வி கற்பதற்காக வந்திருந்தாலும், அதிபர்கள், ஆசிரியர்கள் இல்லாததால் தங்கள் பிள்ளைகளை பாடசாலைகளிலிருந்து சிறிது நேரத்தில் அழைத்து சென்றதாகவும் பெற்றோர் சிலர் தெரிவித்தனர்.

# அதிபர், ஆசிரியர்கள் சமூகமளிக்காததால் எதிர்ப்பு தெரிவித்து மாணவர்களும், பெற்றோர்களும் ஆர்ப்பாட்டம்



**(க.கிஷாந்தன்)**

அதிபர், ஆசிரியர்கள் நேற்று பாடசாலைக்கு சமூகமளிக்காததால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றோர்களும், மாணவர்களும் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர். தலவாக்கலை, லிந்துலை ராணிவத்தை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களும், அவர்களின் பெற்றோருமே இவ்வாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

200 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் இன்று திறக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது. இதன்படி பாடசாலையை திறப்பதற்கு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்குமாறு வலியுறுத்தியுமே போராடுவதாக பெற்றோர் தெரிவித்தனர்.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களில் கல்வி நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும். அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகள், போராட்டமின்றி தீர்க்கப்பட வேண்டும். எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# அட்டப்பள்ளத்தில் இரு உயர்நிருவாகசேவை அதிகாரிகள் முன்னிலையில் உலருணவு நிவாரணம்!





**(வி.ரி.சகாதேவராஜா)**

நிந்தவூர் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பின்தங்கிய அட்டப்பள்ளம் கிராம மக்களுக்கு ஒருதொகுதி உலருணவு நிவாரணம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் இரு பெரும் உயர் நிருவாகஅதிகாரிகள் முன்னிலையில் கிழக்கின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் இதனை வழங்கிவைத்தார். கிழக்கு மாகாணசபையின் பேரவைச்செயலாளரான கலாநிதி மூத்ததம்பி கோபாலரெத்தினம் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ஆகிய உயர்நிருவாகசேவை அதிகாரிகள் கலந்துகொண்டுரையாற்றியதுடன் நிவாரணப் பொதிகளை வழங்கிவைத்தமை விசேட அம்சமாகும்.

கொரோனாத் தொற்றினால் வாழ்வாதாரத்தை இழந்த ஒரு தொகுதி (500 குடும்பங்கள்) அம்பாறை மாவட்ட மக்களுக்கு 1மில்லியன் ருபா (10 லட்சருபா) செலவில் உலருணவு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் ஓரங்கமாகவே இது நடைமுறைப்படுத்தபட்டது. வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளரும் பிரபல சமுகசெயற்பாட்டாளருமான வி.ரி.சகாதேவராஜா தலைமையில் அட்டப்பள நிவாரணவிநியோகம் இடம்பெற்றது.

கனடா நாட்டிலுள்ள ரு டீப் நிறுவனம் இதற்கான நிதிஅனுசரணையை கிழக்கின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலினூடாக வழங்கியுள்ளது. நிகழ்வில் அட்டப்பள்ள ஆலயத்தலைவர் த.போபாலன் தொழினுட்ப உத்தியோகத்தர் எஸ்.சிறிரங்கன் ஆகியோரும் கலந்துகொண்டு வழங்கிவைத்தனர். இறுதியில் கிராமமக்கள் நன்றியுரைத்தனர்.

முன்னதாக திருக்கோவில் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மண்டானை தங்கவேலாயுதபுரம் கஞ்சிகுடிச்சாறு மற்றும் திராய்க்கேணி ஆகிய கிராம மக்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ஏலவே உலருணவு நிவாரணம் வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மலையக பகுதிகளில் சுமார் 20 வீதமான பாடசாலைகளே திறப்பு

**(க.கிஷாந்தன்)**

200 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்தாலும், பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை இடம்பெறவில்லை. மாணவர்களின் வருகையும் குறைவாகவே காணப்பட்டது.

மலையக பகுதிகளில் சுமார் 20 வீதமான பாடசாலைகளே திறக்கப்பட்டிருந்தன. மாணவர்களின் வருகையில் பெரும் வீழ்ச்சி காணப்பட்டது.

ஒக்டோபர் 25 ஆம் திகதியில் இருந்தே அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளித்திருப்பார்கள் என அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்திருந்தது. 21 மற்றும் 22 ஆம் திகதிகளிலும் பணி புறக்கணிப்பு போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டது.

இதன்படி அதிபர், ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் இன்று பாடசாலைக்கு வரவில்லை. வருகை தந்த சில மாணவர்களும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Nithur
JEWELLERY
தங்க நகை
சேமிப்புத்திட்ட
வாடிக்கையாளர்களுக்கு
★ கண் கவர் அழகிய நகைகள்
★ வருடாந்த தங்க நகை சேமிப்புத்திட்டம்
★ பழைய பவுண் கொள்வனவு
★ பழைய நகைகளுக்கு புதிய நகைகள்
★ உடைந்த நகைகளை திருத்திக் கொடுத்தல்
★ Imitation பொருட்கள்
★ புதிய டிசைன்களில் அனைத்து நகைகளும் எம்மால் செய்து தரப்படும்
Luisenstrasse 21, 8005 Zurich Switzerland
044 2710827 / 076 3301644
nithurag@hotmail.com




# மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் 27 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன

இப்பாடசாலைகளுக்கு கனிசமான அளவு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் சமுகமளித்திருந்ததாக வலயக் கல்விப்பணிமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பாடசாலைகளின் ஆரம்ப பணிகளை மேற்பார்வை செய்வதற்கென வலயக் கல்விப்பணிமனையின் அதிகாரிகள் தரிசிப்புச் செய்திருந்தனர்.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக பல மாதகாலமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மீள திறக்கப்பட்டபோது அதிகளவிலான மாணவர்கள் சீருடையின்றி நிற ஆடைகளுடன் சமுகமளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் இருநூறு பேருக்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட காத்தான்குடி கோட்டத்தின் 12 பாடசாலைகளும் ஏறாவூர்க் கோட்டத்தின் 7 பாடசாலைகளும் மற்றும் கோறளைப்பற்று மேற்கு கோட்டத்தின் 8 பாடசாலைகளும மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார விதிமுறைகளைப்பின்பற்றி மாணவர்கள் பாடசாலைக்குச்சமுகமளித்திருந்தனர்.

பாடசாலைச்சுற்றாடல் மற்றும் உள்ளக பகுதிகளும் பெற்றார் மற்றும் பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் சிரமதானப்பணி மூலம் சுத்தம் செய்யப்பட்டு தளபாடங்கள் கிருமி தொற்றுநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று இளைஞர் கழகங்களின் சம்மேளனத்திற்கான டீ சேர்ட் அறிமுக நிகழ்வு




(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று இளைஞர் கழகங்களின் சம்மேளனத்திற்கான டீ சேர்ட் அறிமுக நிகழ்வு இளைஞர் சேவை அலுவலகர் எம்.எம். ஸமீலுல் இலாஹியின் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் டி.எம்.எம். அன்ஷார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அக்கரைப்பற்று இளைஞர் கழகங்களின் சம்மேளனத்திற்கான டீ சேர்ட்டினை அறிமுகம் செய்துவைத்தார்.

மேலும் இந்நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம் மற்றும் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அலுவலகர் ஏ.முபாரக் அலி கலந்துகொண்டதுடன் மேலும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. றுமைஸா, அக்கரைப்பற்று பிரதேச சம்மேளனத் தலைவர் எம்.எம். றுக்சான் மற்றும் இளைஞர் கழகங்களின் சம்மேளன உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# நேற்று கிழக்கில் உயர்தர மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்கும்பணி ஆரம்பம்



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலை உயர்தர மாணவர்களுக்கான பைசர் ரக தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் நேற்று (21) கிழக்கு மாகாணத்தில் ஆரம்பமானது.

காரைதீவுப்பிரதேசத்தில் பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.இன்றும் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

18-19வயதுக்குட்பட்ட உயர்தர மாணவர்களுக்கான இத்தடுப்பூசிகள் காரைதீவு விபுலாநந்த தேசிய கல்லூரி காரைதீவு சண்முகா மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் காலை 8மணிமுதல் மாலை 4மணி வரை ஏற்றப்பட்டுவருகிறது.

நேற்று வியாழக்கிழமை முதற்தடவையாக க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்ற மாணவர்களுக்கு ஏற்றப்பட்டன.இன்று(22)வெள்ளிக்கிழமை இரண்டாம்தடவையாக தோற்றவிருக்கும் மாணவர்களுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்படவிருக்கின்றன.

இந்த இருதினங்களிலும் ஏற்றத் தவறிய மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை (23) காரைதீவு சுகாதாரவைத்தியஅதிகாரி பணிமனையில் ஏற்றப்படவிருக்கிறது.

எனவே குறித்த வயதுக்குட்பட்ட சகல மாணவர்களும் இந்த பைசர் ரக தடுப்பூசியைப் குறித்ததினங்களில் பெற்றுக் கொள்ளுமாறு காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்தஸ்லிமாபஷீர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கிழக்கில் 16-19வயது மாணவர்களுக்கு நேற்று முதல் பைசர் தடுப்பூசி

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெளபீக்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் ஏலவே அறிவிக்கப்பட்டவாறு 18 - 19வயது உயர்தர மாணவர்களுக்கு மட்டுமல்லாது,16 வயது தொடக்கம் 19 வயது வரைக்குமான அனைத்து மாணவர்களுக்கும் பைசர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம் தௌபீக் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் நேற்று வியாழக்கிழமை மாகாணத்தின் சகல பிரதேசங்களிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தத்தமது பாடசாலைகளில் இப்பைசர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளலாம்.அவ்வாறு குறித்த பாடசாலையில் நிலையம் இல்லாவிட்டால் அண்மையிலுள்ள தடுப்பூசி வழங்கும் மையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் கொரோனா நோயாளிகளின் தாக்கம் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்து வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் செப்டம்பர் மாதம் முதலாம் வாரத்தில் 4400 கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் நூறு மரணங்கள் வரை பதிவாகியது இருந்தபோதிலும் அதிகளவாக ஒக்டோபர் முதலாம் திகதி 612 கொரோனா நோயாளிகளும் இருபத்தி இரண்டு மரணங்களும் மாத்திரம் பதிவானது.

அத்துடன் 2ஆம் திகதி 400 நோயாளிகளிடம் தொற்று காணப்பட்டுள்ளதாகவும் பதினொரு மரணங்கள் மாத்திரமே பதிவானதாக கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம் தௌபீக் தெரிவித்தார்.

மேலும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கொரோனா தடுப்பு மருந்து வழங்கும் செயற்பாடு விரைவாக செயல்படுத்தப்பட்டுள்ளதுடன் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் 90 வீதமானவர்களுக்கு கோவிட் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

# ரஹ்மத் பவுண்டேனின் மகத்தான சேவை 1300 பயனாளிகளுக்கு குழாய்க் கிணறுகள் வழங்கி வைப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷனின் வீட்டுக்கு வீடு குழாய் நீர் கிணறு எனும் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மேலும் ஒரு தொகுதி குழாய்க்கிணறு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பவுண்டேஷனின் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் மாலை இந்நிகழ்வு இடம்பெற்றது.இதன்போது பல இடங்களிலும் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள் உரிய பயனாளிகளிடம் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் பயன்பெறும் வகையில் குறித்த திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரஹ்மத் மன்சூர் இதன்போது தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை அடையாளம் காணப்பட்ட சுமார் 1300 இற்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு அவர்களது குடியிருப்புகளில் இவ்வாறு குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளன. இதனை இன்னும் விஸ்தரிப்பு செய்து, தேவையுடைய மக்களுக்கு இச்சேவையை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நிலைபேறான சேவையை எமது அமைப்பு வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனுசரணை வழங்கி வருகின்ற வை.டபிள்யூ.எம்.ஏ. நிறுவனத்துக்கு உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வாதப் பிரதிவாதங்களுடன் நடைபெற்ற மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 44வது சபை அமர்வு

(ரக்ஸனா, எருவில்துசி)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் 44 வது சபை அர்வு வியாழக்கிழமை களுதாவளையில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையில் சபையின் உப பவிசாளர் திருமதி.கனகராச ரஞ்சினி தலைமையில் நடைபெற்றது.


இதன்போது 2022 ஆம் ஆண்டுக்கான வரைவு பாதீடு சமர்ப்பிக்கப்பட்டதுடன், சபை உறுப்பினர்களின் மருத்துவ விடுமுறை, பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் கடினப்பந்து விளையாடுவது தொடர்பான விடையம், பெரியகல்லாறு மைதான கொங்றீட் வீதி அமைக்கப்பட்ட விடையம், பதிலீட்டு அடிப்படையில் கடமையாற்றும், 27 ஊழியர்களின் கால நீடிப்பு, 2021 செப்டம்பர் மாதத்திற்கான வரவு செலவு அறிக்கை அனுமதித்தலும், உறுதிச்சீட்டுக் கொடுப்பனவுக்கான அனுமதி போன்ற பல விடையங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இதன்போது பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் கடினப்பந்து விளையாடுவதற்கு அக்கிராமத்தவர்கள் சிலரது வேண்டு கோளிற்கிணங்க இப்பிரதேச சபை ஏற்கனவே தற்காலிகமாக அதில் கடினப்பந்து விளையாடுவதற்குத் தடை வித்தித்துள்ளது. இந்நிலையில் அக்கிராமத்தைச் சேர்ந்த 8 விளையாட்டுக் கழகங்கள் தாம் குறித்த விளையாட்டு மைதானத்தில் தொடர்ந்து அந்த மைதானத்தில் கடினப்பந்து விளையாட வேண்டும் அதற்குரிய அனுமதியைத் தந்துதவுமாறு கோரி அனுப்பின கடிதங்கள் இதன்போது உபதவிசாளரினால் வாசிக்கப்பட்டது. இவ்விடையில் சபை உறுப்பினர்களிடையே மிகுந்த வாத பிரதிவாதங்களும், தர்க்கங்களும், இடம்பெற்றதைத் தொடர்ந்து பிரதேச சபை உறுப்பினர்கள் கொண்ட குழுவொன்று குறித்த மைதானத்தில் விளையாடுவதங்குத் தடை ஏற்படுத்துமாறு கோரிய மக்களிடம் நேரில் சென்று கருத்துக்களைப் பெறுவது எனவும், பின்னர் மீண்டும் குறித்த விளையாட்டை விளையாட வேண்டும் என கோரும் 8 கழங்களையும் அழைத்து பேசுவது எனவும், அதன் பின்னர் குறித்த விளையாட்டுக்கு பிரதேச சபையால் விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடையை நீக்குவது எனவும், இது வருகின்ற ஒரு வாரத்தினுள் இடம்பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பிரதேச சபை உறுப்பினர்களிடையே மாறி மாறி தர்க்கம் இடம்பெற்றுக் கொண்டிருந்த இவ்வேளையில் தனக்கு பேசுவதற்குச் சந்தர்ப்பம் தடிவில்லை எனதுறைநீலைவணை வட்டார பிரதேச சபை உறுப்பினர் கணபதிப்பிள்ளை சரவணமுத்து சபை நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை இடைநடுவே சபையை விட்டு வெளியேறினார்.

# உலக சாதனை புத்தகத்திலே இடம்பிடித்தார் நிந்தவூரை சேர்ந்த குட்டி சிறுமி அனத் ஜிதாஹ்

(தர்மேந்திரா)



நிந்தவூரை சேர்ந்த குட்டி சிறுமி பாத்திமா அனத் ஜிதாஹ் ஆசிய நாடுகளின் தேசிய கொடிகளை மிக வேகமாக அடையாளம் கண்டு உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்து உள்ளார்.

இவர் ஏற்கனவே 48 ஆசிய நாடுகளின் தேசிய கொடிகளை 24 செக்கன்களில் அடையாளம் கண்டு ஆசிய புத்தகத்தில் இடம்பிடித்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி உலக சாதனையை மேற்கொண்டார்.

இவரின் தந்தை தொலை தொடர்பு பொறியியலாளர் ஆவார். தாய் முன்பள்ளி ஆசிரியர். இரு பிள்ளைகளில் இவரே மூத்தவர். உலக சாதனை மேற்கொண்டபோது இவருக்கு வயது 4 வருடங்கள், 09 மாதங்கள், 08 நாட்கள்.

இவரின் தந்தை எம். எல். எம். ஜெசிம், தாய் யூ. கே. பாத்திமா ஜௌஹரா ஆகியோர் கருத்து கூறுகையில் அனத் ஜிதாஹ் மிகுந்த புத்தி கூர்மையும், நிறைந்த ஞாபக சக்தியும், சிறந்த அவதானமும் உள்ளவர், எந்த விடயத்தையும் ஒரு தடவையிலேயே கிரகித்து கொள்வார், நாடுகளின் தேசிய கொடிகளை அடையாளம் காண்பதில் இயல்பாகவே அவருக்கு நாட்டம் இருந்து வந்தது, அனைத்து நாடுகளின் தேசிய கொடிகளையும் அவரால் மிக வேகமாக அடையாளம் கண்டு சொல்ல முடியும், இவரிடம் இன்னமும் பல திறமைகள் உள்ளன, நாடுகளின் தலை நகரங்கள் மற்றும் தலைவர்களையும் அடையாளம் கண்டு வேகமாக சொல்கின்றார், ஆங்கில சொற்களை வாசிக்கின்றார், எண்களை கூட்டி சொல்கின்றார், ஏராளமான சிறுவர் கதைகளை நினைவில் வைத்து சொல்கின்றார் என்று தெரிவித்தார்கள்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Frühstück / Mittagessen / Abendessen
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL.,CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT
Maestro

# MATHE BILDUNGSZENTRUM

# கணித கற்கைநெறி மையம்

MBZ

**கல்வியே துணை**

பள்ளித் தலமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

**Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung**
**BMS, HMS, FMS, Gymi Probe**

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

**Oerlikon, Uster, Schaffhausen**

# விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்கள்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

தங்களுக்கு இரசாயன பசளையே வேண்டும் சேதனப் பசளையால் விவசாய செய்கை அறுவடையை பெற முடியாது எங்களது வயிற்றில் அடிக்காதீர்கள் என தம்பலகாமம்சம் மாந்துறை வெளி விவசாய சம்மேளன உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்பலகாமம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

இதில் க.திலகரட்ணம் உப தலைவர்(சம்மாந்துறை வெளி விவசாய சம்மேளனம்),க. இராசலிங்கம்செயலாளர்,

க. விஜயரட்ணம்உப செயலாளர், எம்.கிருஷ்ணப் பிள்ளைவிவசாயி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு கருத்து தெரிவித்திருந்தனர்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் சேதன உரம் காரணமாக கலை நாசினி புல்வகைகளை முளைக்கின்றன விளைச்சல் குறைவாக உள்ளது . சேதனை பசளை தயாரிப்பு தொடர்பில் எவ்வித அறிவும் எமக்கின்மை இதனால் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளோம். இந்த அரசாங்கம் ஆளுக்கொரு கதையை சொல்கிறார்கள் பிரதமர் ஒரு கதை ஜனாதிபதி விவசாய அமைச்சர் என ஆளுக்கொரு கதையை கூறி வருகின்றனர். எங்களது தம்பலகாமம் பிரதேசம் ஊடாக 2000 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கை பண்ணப்பட்டு



வருகிறது .ஆனால் இம் முறை பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது தங்களது வாழ்வாதாரமே வேளாண்மையில் தான் தங்கியுள்ளது .குடும்பங்களும் இதை நம்பியே வாழ்கிறது.எது எப்படியோ தங்களுக்கு இரசாயன உரத்தை பெற்றுத்தருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றனர்.

# செருவில ராஜமஹா விகாரைக்கு சமல் ராஜபக்ச விஜயம்





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை செருவில ராஜமஹா விகாரைக்கு நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் உள்துறை அமைச்சர் சமல் ராஜபக்ச விஜயமொன்றை மேற்க்கொண்டிருந்தார்

நேற்று (20) போய தினத்தினை முன்னிட்டு இவ்விஜயத்தினை மேற்க்கொண்டிருந்தார்.

கடந்த 30 வருடகாலங்களாக நாட்டில் ஏற்ப்பட்டிருந்த யுத்தத்தினால் போராடி நாட்டினையும் நாட்டு மக்களையும் விடுவிக்க பாடுபட்ட இராணுவ வீரர்களை நினைவுகூரும் முகமாக இன்றைய போய தினத்தில் விசேட வழிபாடுகளுக்காக செருவில ராஜமஹா விகாரைக்கு சமல் ராஜபக்ச விஜயம் செய்திருந்தார்

இவ் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரள இராணுவ அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி நிலையம் முற்றுகை ; ஒருவர் கைது



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரோதய நகர் பகுதியில் சட்டவிரோத மதுபான உடற்பத்தி நிலையமொன்று முற்றுகையிடப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர்

நேற்று முன்தினம் இவ் சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

உப்புவெளி போதைத்தடுப்பு இரகசிய பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து இவ் சுற்றிவளைப்பு மேற்றக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்டுகின்றது

இவ் சுற்றிவளைப்பில் சட்டவிரோத மதுபானம் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட ஐந்து பரல்கள் மற்றும் கசிப்பு தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் ஒருதொகை கோடாவுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர்

மேலும் இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள தகவும் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிசார் மேற்றக்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது

# பங்களாதேஷ் பயணம் ஆகின்றார் அஸ்லம் சஜா

(நூருல் ஹுதா உமர்)



பங்களாதேஷ் பயணிக்கும் அஸ்லம் சஜா பங்களாதேஷில் இம்மாதம் 25ம் திகதி ஆரம்பமாக உள்ள 2nd Division kabaddi league TournamentÀ “Meghna kabaddi Club“ அணிக்கு ஆடுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இவர் இலங்கை தேசிய கபடி அணி வீரரும் நிந்தவூர் மதீனா விளையாட்டு கழகத்தின் சிரேஷ்ட வீரரும் நிந்தவூர் மதினா தேசிய பாடசாலையின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்.

கடந்த மார்ச் மாதம் இலங்கை அணி சார்பாக பங்களாதேசில் இடம்பெற்ற சர்வேதேச போட்டியில் சிறப்பாக திறமைகள் வெளிக்காட்டியதால் இவர் தெரிவு செய்யபட்டுள்ளார்.

# மூன்று மாதங்களின் பின்னர் பாடசாலைகள் ஆரம்பம் கிழக்கில் 588 பாடசாலைகள் திறக்கப்பட்டன





(ரீ.எல்.ஜவ்பர்கான் மட்டக்களப்பு)

சுமார் மூன்று மாதங்களின் பின்னர் 200 மாணவர்களுக்கு குறைவாக கல்வி கற்கும் பாடசாலைகள் நேற்று திறக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மாவட்டங்களில் 588 பாடசாலைகள் இன்று திறக்கப்படுவதாக மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி புள்ளநாயகம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகள் திறக்கப்பட்டன.மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி பாடசாலைகளுக்கு வருகை தந்தனர்.மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 36 பாடசாலைகள் திறக்கப்பட்டதாக வலய கல்வி பணிப்பாள திருமதி சுஜாதா குலேந்திரன் தெரிவித்தார்.

மாணவர்களின் வரவு குறைவாக இருந்த போதிலும் அதிபார் ஆசிரியர்கள் பெருமளவில் சமுகமளித்திருந்தனர்.

# மட்டு.மாவட்டத்தில் முதல் தடவையாக உயர்வகுப்பு மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பம்





(ரீ.எல்.ஜவ்பர்கான்)

உயர்வகுப்பு மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று முதன் முறையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பாகியுள்ளன.பைஸர் தடுப்பூசிகளே இவ்வாறு ஏற்றப்படுவதாக கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

மட்டககளப்பு மகாஜன கல்லூரி மண்டபத்தில் இன்று காலை தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம் பெற்றன.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் இ.உதயகுமார் முன்னிலையில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தூக்கத்திலிருந்த யுவதியின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற திருடன்!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

நல்லிரவில் தூங்கிக் கொண்டிருந்த யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடன் ஒருவன் அறுத்துச் சென்றுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - பதுரியா நகரிலுள்ள வீடொன்றிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டார் தூங்கிக் கொண்டிருக்கும் போது கதவை உடைத்து உள்நுழைந்த திருடன் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தையும் நகையையும் திருடிவிட்டு, தூங்கிக் கொண்டிருந்த யுவதியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு திருட்டில் ஈடுபட்ட திருடன் அலுமாரியில் இருந்த விலையுயர்ந்த கைத் தொலைபேசியை திருடாமல் பணத்தையும் நகைகளையும் திருடிச் சென்றுள்ளதாக வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இத் திருட்டுச் சம்பவத்தை கண்டுபிடிக்க வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்டத்திலும் நீண்ட இடைவெளியின் பின் பாடசாலை ஆரம்பம்:மாணவர்களின் வருகை குறைவு!

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நீண்ட நாட்களின் பின்னர் நாட்டில் நேற்று வியாழக்கிழமை முதல் பாடசாலைகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

200 மாணவர்களுக்கு குறைவாக மாணவர்களது எண்ணிக்கைகளை கொண்ட பாடசாலைகள் இன்றைய தினம் வியாழக்கிழமை முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்திலும் 200 மாணவர்களுக்கு குறைவாக உள்ள பாடசாலைகள் இன்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் முதல்கட்டமாக 35 பாடசாலைகள் இன்றைய தினம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மாணவர்களது வருகை மிக மந்த கதியில் இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பரவலான பாடசாலைகளில் 10க்கும் குறைவான மாணவர்கள் வருகை தந்திருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்ததுடன், தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய பயிலுனர்கள் மாத்திரமே வருகை தந்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நகரை அண்டிய பாடசாலைகளை விட கிராமப் புறங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் மாணவர்களது வருகை ஒப்பிட்டளவில் அதிகமாக காணப்பட்டதுடன் மேலும் மேலும் பாடசாலைக்கு சமூகமளித்தவர்களில் கனிஷ்ட பிரிவு மாணவர்கள் மாத்திரம் அதிகளவில் சமூகமளித்ததுடன் பாடசாலை சீருடைகள் அல்லாத வேறு ஆடைகளில் அதிகமான மாணவர்களை காணக்கூடியதாக இருந்ததும் குறிப்பிடத்தகது.

